ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# தொல்காப்பியத்தில் பெண்ணியச் சிந்தனைகள்

**முனைவர் பா.இமாகுலேட்**

**உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை**

**புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி**

**திருச்சிராப்பள்ளி – 02**

**17**

**ஆய்வுச்சுருக்கம்:**

தமிழ் மொழியில் கிடைத்திருக்கும் நூல்களில் பழமையானது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலாகும். இந்நூல் தமிழரின் இல்வாழ்க்கையைப் படம் பிடித்துக்காட்டுகின்றது. பெண்ணியமானது ஒரு சமூகத்தின் வரலாறு, பண்பாடு இவற்றைப் பற்றிய உணர்வு, நோக்கு, செயல் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடும் என்று குறிப்பிட்டுள்ளனர். பெண்ணியம் என்பதற்குப் பல விளக்கங்கள் தரப்பட்டு வருகின்ற நிலையில் அதில் பல வேறுபாடுகள் இருப்பினும் அடிப்படையில் பாலியல் சமத்துவம் என்ற பொருளையே தருகின்றது. **தொல்காப்பிய**க் காலத்தில் ஆண்களுக்கு கொடுக்கப்பட்ட உரிமைகள் அனைத்தும் பெண்களுக்கும் கொடுக்கப்பட்டனவா என ஆராய்ந்து பார்க்கும் பொழுது இல்லை என்றே சொல்லமுடிகிறது. இதனையே இவ் ஆய்வுக்கட்டுரை விளக்கியுள்ளது.

**திறவுச்சொற்கள்:**

உரன் – வலிமை,கிழவி – தலைவி ,வேட்கை – விருப்பம், மகடூஉ – பெண், முந்நீர் – கடல்,திணை – ஒழுக்கம், வழு – குற்றம்

**முன்னுரை:**

Feminism என்னும் ஆங்கிலச் சொல் Femina எனும் இலத்தீன் மொழியிலிருந்து உருவானது. 1889 வரை "Womanism" என்ற சொல் பெண்களின் உரிமைப் பிரச்சினைகளையும் அதன் அடிப்படையிலான போராட்டத்தையும் உணர்த்தப் பயன்பட்ட நிலையில் 1980ஆம் ஆண்டு "Feminism" என்று மாற்றம் பெற்றது. 1894 ஆம் ஆண்டு வெளிவந்த ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் முதன் முதலில் இச்சொல் எழுதப்பட்டிருக்கின்றது. இதன் பொருள் பெண்மைக்குரிய இயல்புகளை உடையவள் என்பதாகும். இச்சொல் தமிழில் பெண்ணியம், பெண்நிலைவாதம், பெண் நிலை ஏற்பு, மகளிரியல், பெண் நலக்கொள்கை ஆகிய சொற்களால் அழைக்கப்பட்டு வருகிறது. தொடக்க நிலையில் பெண்ணுரிமை என்றும் பெண் விடுதலை என்றும் எளிமையாகக் குறிப்பிடப்பட்டு 20ஆம் நூற்றாண்டின் இறுதியில் பெண்ணியம் அல்லது பெண்நிலைவாதம் என்ற பெயர்களுடன் ஆழமாக நிலைப்பட்டுப் போயிருக்கும் இச்சித்தாந்தம் குறித்த வரையறையை அறிவியல் துறைகளைப் போல ஓரிரு வரிகளுக்குள் அடக்கிக் கூறிவிட முடியாது. பெண்ணியம் பற்றியச் செய்திகளைத் தொல்காப்பிய நூற்பா வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சமுதாயத்தில் ஆண் - பெண் நிலைப்பாடு:**

சமூகத்தில் ஆணும் பெண்ணும் சமமான அளவிலேயே இருக்கின்றனர். இருவருக்கும் பிறப்பிலோ இறப்பிலோ எவ்வித வேறுபாடும் கிடையாது. தம் உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகளை இருபாலரும் பொதுவாகவே வெளிப்படுத்துகின்றனர். ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையே பால்பாகுபாடு உடல் அமைப்பில் மட்டுமே வேறுபடுகின்றன. அவர்களின் சிந்தனையிலோ செயலிலோ ஒருவர் மற்றவருக்கு தாழ்ந்தவராகக் கருதப்படுவதில்லை. குடும்ப வாழ்க்கையில் ஆண் இல்லாமல் பெண்ணோ பெண் இல்லாமல் ஆணோ வாழ முடியாது. இருவரும் தங்களின் மன ஒற்றுமையாலும் அன்பாலும் இன்பத் துன்பங்களை பகிர்ந்துகொண்டு இணைந்து வாழ்வதே சிறந்த இல்வாழ்க்கையாகக் கருதப்படும். இப்படிப்பட்ட நிலையில் சமுதாயம் ஆண் மட்டுமே உயர்ந்தவன் என்றும் பெண் தாழ்ந்தவள் என்றும் குறிப்பிடுகிறது. பெண் அடிபணிய வேண்டும் என்ற கட்டாயத்தை சமுதாயம் ஏற்படுத்தியிருக்கிறது. சமுதாயம் என்ற நாணயத்தின் இரு பக்கத்தில் ஒரு பக்கம் ஆண் மறுப்பக்கம் பெண்ணாக இணைந்து இருந்தாலும் ஆணின் பக்கமே எல்லா வகையிலும் உயர்வாக கருதப்படுகிறது. இச்சமுதாயத்தில் பெண்களை ஆண்கள் அடக்கி ஆளுகிறார்கள் என்றால் பெண்ணினத்திலோ சில பெண்களே நாம் அடக்க ஒடுக்கமாக ஆண்களுக்கு அடங்கிய நடக்க வேண்டும் அவளே சிறந்த பெண் என்று அறிவுரை கூறுவதைப் பார்க்கின்ற பொழுது பெண்கள் தன் உரிமை பெற ஆண் இனம் தடையாக இருப்பதைப் போல, சில பெண்களுமே அவற்றைப் பெற சமுதாயத்தில் தடையாக இருக்கிறார்கள் என்பதை உணர முடிகிறது.

**தொல்காப்பிய காலமும் பெண்களும்:**

பண்டைய கால முதல் இன்று வரை பெண்கள் என்றாலே மென்மையானவள் என்ற கருத்து நிலவுகின்றது பெண் இயல்பாகவே அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற குணங்களை உடையவள் என்று கூறப்படுகின்றது.

“அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குறிய என்ப”**1**

இவ்விலக்கணங்கள் பெண்களை ஆண்களுக்கு அடிமையாக்கி காட்டுகின்றன. மேலும்

“செறிவும் நிறைவும் செம்மையுஞ் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான” **(தொல்:பொருள்:14)**

இத்தகைய இயல்பு உடையவளாகவும் தொல்காப்பியர் கால பெண்கள் சுட்டப்படுகின்றனர்.

கண்டதும் காதல் அரும்புகிறது. அதனை வெளிப்படுத்தும் உரிமை ஆணுக்கே தரப்படுகிறது. பெண் ஒருத்தி எவ்வளவுதான் கற்று, பட்டம் பெற்று, பதவிகளில் அமர்ந்து, திறம்பட நடத்தினும் காதலில் முந்திக்கொள்ளுதல் பெண்ணின் இயல்பன்று. காதல் இருபாலினத்தாரிடமும் இயல்பாய் எழும் உணர்வு தான் என்றாலும்,

“பெருமையும் உரனும் ஆடூஉ மேன”**2**

எனத் தொலகாப்பியம் சுட்டுவதிலிருந்து ஆண்களைவிட பெண் எவ்வளவு சிறப்புடைவர்களாக இருந்தாலும், ஆணின் முன் பெண் பேசாது அடங்கிய நடக்க வேண்டும் என்பதை,

"தற்புகழ் கிளவி கிழவன் முற்கிளத்தல்
எத்திற் தானும் கிழத்திக் கில்லை
முற்பட வகுத் திரண்டரங் கடையே"3

என்கிறது தொல்காப்பியம். தற்புகழ்ச்சி கூடாது என்பது சரியே. ஆனால் ஆணுக்கு மட்டும் அவ்வுரிமை தரப்படுகிறது.

"கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி
கிழவோன் வினைவயின் உரிய என்ப"4

ஒரு பெண் தன்னுடைய காம வேட்கையைக்கூட தன் தலைவனிடம் கூறுவது கூடாது என்பதை,

"தன்னூறு வேட்கை கிழவன்முன் கிளத்தல்
எண்ணும் காலைக் கிழத்திக்கு இல்லை"5

என்கிறது தொல்காப்பியம் மனைவிக்கு எந்த ஒரு உரிமையும் கணவன் தான் கொடுப்பான் என்பதை,

"உரிமை கொடுத்த கிழவோன்" 6

என்கிறது. இவற்றை உற்று நோக்குகையில் அக்கால சமூகத்தில் பெண்களின் எல்லா உரிமைகளும் ஆண்கள் கையிலே இருந்தன என்பது புலப்படுகிறது.

"ஆறறி வதுவே அவற்றொடு மனனே"7
"மக்கள் தாமே ஆறறி உயிரே"8

இத்தொல்காப்பிய நூற்பாக்கள் மக்கள் ஆறறிவு உடையவர்கள் என்றும், ஆறறிவு என்பது மனத்தால் உணரப்படுவது. மனதால் எதையும் உணர கல்வியறிவு அவசியம். கல்வி என்பது ஆண் பெண் இருவருக்கும் பொதுவான ஒன்று. களவிலும், கற்பிலும் தன் நாட்டிடத்தே தலைவன், தலைவியை உடன் அழைத்துச் செல்லுதல் கூடும். ஆனால் கடல் கடந்து வெளிநாடு செல்லும் பொழுது மனைவியை அழைத்துச் செல்லுதல் கூடாது. ஆண்கள் மட்டும் பொருளுக்காகவோ, கல்விக்காகவோ கடல் கடந்து செல்லலாம் ஆனால், பெண்கள் எந்த ஒரு காரணத்திற்காகவும் கடல் கடந்து செல்லுதல் கூடாது என்பதை,

"முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை"9

என்கிறது தொல்காப்பியம்.

மொழிக்குள்ள ஆற்றலை புரிந்து கொண்ட தொல்காப்பியர் முதலில் பெண்ணின் வாய்மொழியை தடை செய்கிறார்.

"அருண்முந் துறுத்த அன்புபொதி கிளவி
பொருள்பட மொழிதல் கிழவோட குரித்தே"10

என்ற சூத்திரங்கள் மேல் சுட்டிய செய்தியை மெய்ப்பிக்கின்றன. இரு மனம் கலந்தது திருமணம் என்பர் அத்தகு திருமண நிகழ்ச்சியில் கூட பெண்ணின் சம்பந்தம் பெறப்படுவதில்லை. மணமேடையில் பெண் என்பவள் அலங்கரித்த பாவை மட்டுமே என்று குறிப்பிட்டு இருக்கிறது தொல்காப்பியம். இச்செய்தியை தொல்காப்பியர் எண் வகை மணங்கள் மூலமும் விளக்கியுள்ளார்.

"…. ……. ……. ……..
மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள்
…. ……. ……. ……"11

"பிரம்மம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம்
காந்திருவம் அசுரம் இராக்கதம் பைசாசம்"

என்ற எட்டனுள் 'காந்திருவம்' தவிர மற்ற மணங்களில் பெண்ணின் கருத்தினை கேட்டு திருமண நிகழ்ச்சியை நடத்தியதாக இல்லை எனலாம். பெற்றோர் விருப்பம், சான்றோர் அறிவுரை, மணமகன் விருப்பம் என்று மட்டுமே பார்த்து மணம் நிகழ்த்தப்பட்டிருக்கிறது என்பதை களவியல் என்னும் இயல் வழி அறிய முடிகிறது.

**பெண் அடக்கு முறை:**

தொல்காப்பியர் காலத்தில் பெண்கள் பல்வேறு அடக்குமுறைகளைக் சகித்துக் கொண்டுள்ளனர். பெண் ஆணிடம் அதிகமாக பேசக்கூடாது, எதிர்மொழி பேசக்கூடாது, கணவன் பரத்தை வீட்டிற்கு சென்று வந்தாலும் அவனிடம் கோபம் கொள்ளக் கூடாது, இன்னபிற சுதந்திரமும் இன்றி பெண்கள் அடக்குமுறைக்கு ஆட்பட்டிருந்தனர் என்பதை,

"தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்
எண்ணும் காலைக் கிளத்திக் கில்லைப்
. …… …. ……" 12

தலைவி தன் விருப்பத்தை நேரடியாக உணர்த்தாமல் மறைமுகமாகவும் குறிப்பாலும் சூழ்நிலையாலும் உணர்த்தும் தன்மை உடையவள். தலைவனுக்கு எதிர் நின்று அவன் சொன்னவற்றிற்கு மறுப்பு பேசியவளாக சுட்டப்படவில்லை.

"காமத் திணையிற் கண்நின்று வரூஉம்
நாணும் மடனும் பெண்மைய ஆகலின்
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள்வயின் ஆன" 13

"காமஞ் சொல்லா நாட்டம் இன்மையின்
ஏமுற இரண்டும் உளவென மொழிப" 14

"சொல்லெதிர் மொழிதல் அருமைத் தாகலின்
அல்ல கூற்றுமொழி அவள்வயி னான" 15

என்ற நூற்பாக்கள் வழியாக உறுதிப்படுத்தப்படுகின்றன. மேல் சுட்டிய செயல்பாடுகளில் தொல்காப்பிய காலத்தை பொருத்தவரை தோழி படைப்பு ஒரு விதிவிலக்கு என்று சொல்லலாம்.

**மடல் ஏறுதல்:**

பெண்ணிற்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளில் மற்றொன்று மடலேறுதல். ஆடவன் ஒருவன் விரும்பிய ஒருத்தியை இயல்பாக திருமணம் செய்ய முடியவில்லையெனில் மடலேறியாவது திருமணம் செய்யலாம் என்பதை,

"மடல்மா கூறும் இடனுமா ருண்டே" (தொல்.களவு:11)

என்ற நூற்பா எடுத்துரைக்கிறது. இம்முறையானது மகளிற்கு விலக்கப்பட்டுள்ளது. மகளிர் தாம் விரும்பிய ஆண்மகனைத் திருமணம் செய்ய விரும்பினால் மடலேறும் முறையை மேற்கொள்ளல் கூடாது. மடலேற விரும்புவதாக இலக்கியம் இயற்றவும் கூடாது. அவ்வாறு இயற்றின் நாணமே நல்லணியாகக் கொண்ட நங்கையர்க்கு இழுக்கு கற்பிக்கப்பட்டதாகும். ஆகவே,

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை இன்மையான" 16

என்று தொல்காப்பியர் விளம்பியுள்ளார். இதனை

"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்கது இல" 17

என்கிறார் திருவள்ளுவர்.

**நற்றாய் புலம்பல்**

உடன் போக்கில் தலைவன் தலைவியைத் தன்னுடன் அழைத்துச் சென்றவுடன். அவர்களைத் தேடிச்செல்ல நற்றாய்க்கு உரிமையில்லை. ஆனால் செவிலித்தாய் ஒரு குறிப்பட்டத் தொலைவு வரைத் தேடிச்செல்லலாம்.

தலைவியையும் தலைவனையும் தன் நிலையையும் உடன்போக்குக்குபின் எண்ணிப் புலம்பும் தன்மை உடையவளாக நற்றாய் இலக்கியங்களில் காட்டப்பட்டுள்ளாள். இதனை,

"தன்னும் அவனும் அவளும் சுட்டி
மன்னும் நிமித்தம் மொழிப் பொருள் தெய்வம்
… ….. ……. ……
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்
ஆகிய கிளவியும் அல்வழி உரிய" 18

என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

**பரத்தையர் பண்பு:**

பெண்ணுக்கு மட்டும் கற்பு என வலியுறுத்திய தொல்காப்பியர் ஆண்களின் பரத்தமை பண்பை ஏற்றுக் கொள்கிறார். மேலும் பெண்களுக்கு கண்ணியம் வேண்டும், ஒழுக்கம் வேண்டும் என்று குறிப்பிடுகிறார். ஆண்கள் பரத்தையர்களிடம் செல்வதை வரவேற்கிறார்.

பரத்தை என்போர் ஒருவரையும் மனம் செய்து கொள்ளாமல் மன்னர், செல்வந்தர், போன்றோருக்கும் காமுகருக்கும் இன்பம் நல்கும் உரிமை உடைய பெண்ணாக வாழ்ந்து வந்துள்ளாள். தம்மை நாடி இன்பம் துய்ப்போர் தரும் பொருளில் வாழ்க்கை நடத்தினர். அதனால் பொருட்பெண்டிர் எனவும் அழைக்கப்பட்டனர். இவர்களை காமக்கிழத்தி, பரத்தை, மாயப்பரத்தை என்றும் கூறுவர்.

காமக்கிழத்தி என்பவள் தலைவனது செல்வ நிலையை அறிந்து தலைவன் மீது அன்பு கொண்டு வாழ்க்கை நடத்தும் அயல் மகளிர் தலைவன் மீதும், தலைவனின் குடும்பத்தின் மீதும் அக்கறை உடையவளாக திகழ்ந்தவள். இவர்களை இல்லக்கிழத்தி என்றும் கூறுவர். இதனை

“காமக் கிழத்தி மனையோள் என்றிவர்

ஏமுறு கிளவி சொல்லிய எதிரும” 19 என்றும்

“காமக் கிழத்தி தன்மகத் தழீஇ

ஏமுற விளையாட்ட இறுதிக் கண்ணும்” 20

என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். தலைவிக்கு அடுத்த நிலையில் தலைவனுக்காக இருப்பவள் என தெரிகின்றது.

அதுமட்டுமல்லாது பரத்தையரின் வீட்டிற்கு சென்று வரும் கணவனை தலைவி கடிந்து பேசாது பேண வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதை பெண்ணின் மீதான பெண்ணியச் சிந்தனையாக கருதப்படுகிறது.

“தாய்போல் கழறித் தழீஇக் கோடல்

ஆய்வினைக் கிழத்திக்கும் உரித்தென மொழிய

கவவோடு மயங்கிய காலையான” 21

“அவன் சோர்பு காத்தல் கடனெனப் படுதலின்

மகன் தாய் உயர்வும் தன் உயர்பாகும்” 22

இதன் மூலம் பரத்தமையை நியாயப்படுத்தி பெண்கள் இதில் இணங்கி போக வேண்டும் என்றும், ஆண் சோர்வோ, துன்பமோ அடையாத வகையில் பெண் எப்பொழுதும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் தொல்காப்பியர் சுட்டி உள்ளமையை அறிய முடிகிறது.

**கணவனை இழந்த மகளிர் நிலை:**

போரில் தனது கணவன் இறந்து விட்டான் என்பதை அறிந்த மனைவி போர்க்களம் சென்று கணவன் இறந்துபட்ட வேலினால் தானும் தற்கொலை செய்து கொண்டள்; என்பதை,

“நீத்த கணவன் தீர்த்த வேலின்

பெயத்த மனைவி வஞ்சி யானும்” 23

என்று எடுத்துரைக்கிறது தொல்காப்பியம் மேலும் சில பெண்கள் தன் கணவன் இறந்தவுடன் தானும் வாழ விரும்பாது ஈமத்தியில் விழுந்து உயிர் விடுகின்ற நிலையும் தொல்காப்பிய கால சமுதாயத்தில் காண முடிகிறது.

“நல்லோள் கணவனோட நளியழல் புகீஇச்” 24

என மொழிகிறது தொல்காப்பியம்.

“பொய்யும் வழுவும் தோன்றியபின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் என்ப” 25 என்ற நூற்பாவின்படியும் பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் கணவனை இழந்த பெண்கள் நிம்மதியாக வாழ முடியுமா? அதனால் தான் அக்கால பெண்கள் கணவன் முடிவு தன் முடிவு என எண்ணி உயிர் துறந்து இருக்கலாம்.

ISSN:2582-9599

**தொகுப்புரை:**

தலைவி, தோழி செவிலித்தாய் ஆகியோர் முதன்மை பெண் மாந்தர்களாக தொல்காப்பியத்தில் திகழ்கின்றனர். இவர்களது அன்பும் அறிவும், ஆளுமையும் அக்கால பெண்டியரின் இயல்பினை படம்பிடித்து காட்டும் காலக் கண்ணாடியாக திகழ்வதை தொல்காப்பிய பெருநூல் வழி அறிகிறோம். தொல்காப்பியர் காலப் பெண்கள் கணவன் இறந்தவுடன் தானும் இறந்தனர். இதனை பாலை நிலை என்றும், தாபத நிலை என்றும் கூறுவர். போரில் இறந்த தலைவனை எண்ணித் தலைவி வருந்துவதையும் தலைவி உடன்கட்டை ஏறுவதைப் போன்ற பல்வேறு செய்திகளையும் புறநானூற்று பாடல் வழி அறிய முடிகின்றது. பெண்கள் நிறை, கற்பு, நாண், நற்பண்புகள் என்ற பெயரில் இயல்பான உணர்வுகளையும் வெளிப்படுத்த உரிமை அற்றவர்களாய், ஆடவரின் உணர்வுகளுக்கும் செயல்களுக்கும் விழைவுகளுக்கும் ஏற்ப ஆடும் ஆடிப்பாவைகளாய் மாற்றப்பட்ட தருணத்தைத் தான் தொல்காப்பியம் குறிக்கிறது.

சான்றெண் விளக்கம்:

1. தொல்.களவு:8
2. தொல். களவு:7
3. தொல.;கற்பு:39
4. தொல். கற்பு:40
5. தொல்.களவு:28
6. தொல்.பொருள் 116
7. தொல்.மரபு:27
8. தொல்:மரபு:33
9. தொல்.அகத்:37
10. தொல்கற்பு:20
11. தொல்.களவு:1
12. தொல்.களவு:28
13. தொல்.களவு:18
14. தொல்.களவு:19
15. தொல்.களவு:20
16. தொல்.அகத்:38
17. திருக்:1138
18. தொல்.அகத்;:36
19. தொல்.கற்பு:5
20. தொல்.கற்பு:7
21. தொல்;.கற்பு:32

22. தொல்.கற்பு:33
23. தொல்.புறத்;:77
24. தொல்.புறத்;:77
25. தொல.;கற்பு:4

**துணைநூற்பட்டியல்**

1. இளம்பூரணர் (உரையாசிரியர்) தொல்காப்பியம் பொருளதிகாரம்
திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
79, பிரகாசம் சாலை(பிராடுவே),
சென்னை – 108.
ஒன்பதாவது பதிப்பு - 1986

2. இலக்குவனார்.சி தொல்காப்பிய ஆராய்ச்சி
சாரதா மாணிக்கம் பதிப்பகம்
பழைய எண் 31, புதிய எண் 10
பழண்டியம்மள் கோயில் தெரு,
ஆதம்பாக்கம். சென்னை – 88
முதல் பதிப்பு -2009